தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280
ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913
විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )
වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA
සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
Ministry of Health

எனது இல ) CF/EXI/04/2021
My No. )
ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )
දිනය )
திகதி ) 2021/07/03
Date )

பொதுச் சுற்றுநிருப இலக்கம் : 02- 51 /2021

மாகாண சுகாதாரச் செயலாளர்கள்,
பிரதிப் பணிப்பாளர்நாயகம் - இலங்கை தேசிய வைத்தியசாலை,
மாகாண சுகாதர சேவைகள் பணிப்பாளர்கள்,
மத்திய அமைச்சின் கீழ் உள்ள சகல வைத்தியசாலைப் பணிப்பாளர்கள்,
பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
உரிய நிறுவனத் தலைவர்களிற்கும்

## தாதி உத்தியோகத்தர் தரம் III ற்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை – 2021

தாதி உத்தியோகத்தர்கள் தரம் III ன் பொருட்டு அனுமதிக்கப்பட்டுள்ள சம்பளப் படிமுறையின் நான்காம் சம்பளப் படிநிலையினை அடைவதற்கு முன்னர் முதல் நியமனத்திகதியிலிருந்து 3 வருடங்கள் நிறைவடைய முன் சித்தியடையவேண்டிய வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை திகதி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது. பரீட்சை நடாத்தப்படும் திகதி இடம், நேரம் என்பன பரீட்சை அனுமதியட்டையில் குறிப்பிடப்பட்டு அனுப்பிவைக்கப்படும்.

02 **தகைமைகள்**

இலக்கம் 1837/8 ம் இலக்க 2013.11.19ம் திகதியில் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள தாதி உத்தியோகத்தர்களுக்கான சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தரம் III ல் வகைப்படுத்தப்பட்டுள்ள தாதி உத்தியோகத்தர்களும், இவ் வினைத்திறமை காண் தடைப் பரீட்சைக்குத் தோற்றி தாபன விதிக்கோவை அல்லது நிதிப்பிரமாணம் விடயங்களில் ஏதாவது ஒன்றில் சித்தியடையாதவர்களும் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்..

03 **விண்ணப்பங்கள்**

இச் சுற்று நிருபத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் படி விண்ணப்பதாரர்களினால் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவரினூடாக பணிப்பாளர் (பரீட்சைகள்), பரீட்சைகள் கிளை, சுகாதார அமைச்சு, "சுவசிரிபாய" , இல 385, வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 என்ற முகவரிக்கு பணிப்பாளர் (பரீட்சைகள்) அவர்களிற்கு **2021/08/16** ஆம் திகதி அல்லது அத்தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலின் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் பத்திரத்தில் விண்ணப்பதாரியினால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தும் சரியானவையென நிறுவனத்தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். தனது விண்ணப்பப் படிவத்துடன் சுய முகவரி எழுதப்பட்ட ரூபா 45.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 9" x 4" அளவுடைய கடித உறை 2 இணையும் அனுப்பப்படல் வேண்டும். (இக் கடிதவுறையில் விரும்பியவாறு அலுவலக முகவரியை அல்லது தனிப்பட்ட முகவரியினை எழுதியனுப்பலாம்) தாமதமாகிப் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்

கவனிக்கவும் : விண்ணப்பமானது **A4** கடதாசியின் இரண்டு பக்கங்களினையும் பாவித்து தயாரிக்கப்பட வேண்டும். முதல் பக்கத்தில் 01 - 04 வரையும் காணப்படுவதுடன் இரண்டாம் பக்கத்தில் 05 - 10 வரையும் காணப்படக்கூடியவாறு தயாரிக்கப்பட வேண்டும். மேற்படி மாதிரிக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

04 பரீட்சைக் கட்டணம்

(i) பரீட்சைக்கு முதன் முறையாகத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணத்திலிருந்து விதிவிலக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் ரூபா 25.00 பெறுமதியுடைய முத்திரையினை ஒட்டி அதன்மீது கையொப்பத்தினையும். திகதியினையும் இட்டு உரிய முறையில் மதிப்பு நீக்கம் செய்யப்படல் வேண்டும்.

(ii) இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது எக் காரணத்தினைக் கொண்டும் வேறு பரீட்சையொன்றிற்கு மாற்றுதலோ. மீள வழங்கப்படுதலோ மேற்கொள்ளப்பட மாட்டாது.

05 பரீட்சைக்கு உட்படுத்திக் கொள்ளல்

(i) ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். அப் பரீட்சை அனுமதி அட்டைகளினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறின்றேல் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி அளிக்கப்படமாட்டாது.

(ii) ஆண். பெண் பரீடசார்த்திகளினால் பரீட்சை நிலையத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு தனது அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை

(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை

(இ) வலுவுள்ள சாரதி அனுமதிப்பத்திரம்

(ஈ) வலுவுள்ள கடவுச் சீட்டு

06 பரீட்சைத்திட்டம்

இவ் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையானது தாபன விதிக்கோவை, மற்றும் நிதிப்பிரமாணம் என்னும் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவின் பொருட்டும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளன. சித்தியடைவதன் பொருட்டு ஒவ்வொரு பிரிவிற்கும் 40 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரே அமர்வில் அல்லது பல அமர்வுகளில் தோற்றி பரீட்சையினை பூரணப்படுத்திக் கொள்ள முடியும். இப்பரீட்சைக்கு முதல் தடவையாக விண்ணப்பிப்பவர்கள் அனைத்து விடயங்களுக்கும் விண்ணப்பித்தல் வேண்டும்.

07 பரீட்சைப் பாடத்திட்டம்

**வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை**

7.1 தாபன விதிக் கோவை வினாத்தாள்

**இவ்வினாப்பத்திரம் 03 மணித்தியாலங்களைக் கொண்ட கட்டுரை வடிவிலான வினாப்பத்திரமாகும் .அதில் 08 வினாக்களில் 05 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**

- ❖ **தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகளை தழுவி தயாரிக்கப்படும்.**

| | | |
|---|---|---|
| II | வது அத்தியாயம் | ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் நியமனங்கள். |
| III | வது அத்தியாயம் | இடமாற்றம் |

- ❖ **தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்களை தழுவி தயாரிக்கப்படும்.**

| | | |
|---|---|---|
| VII | வது அத்தியாயம் | சம்பளம் |
| VIII | வது அத்தியாயம் | மேலதிக நேர கொடுப்பனவு, விடுமுறைதினம், விடுமுறைதினம் தொடர்பான சம்பள கொடுப்பனவு |
| XII | வது அத்தியாயம் | விடுமுறை |
| XIII | வது அத்தியாயம் | புகையிரத ஆணைச்சீட்டு |
| XVII | வது அத்தியாயம் | புகையிரத பருவகாலச் சீட்டு |
| XXII | வது அத்தியாயம் | நலன்புரி வசதிகள் |
| XXV | வது அத்தியாயம் | தொழிற்சங்க உறுப்பினர்களுக்கான நன்மைகள். |

7.2 நிதிப்பிரமாண வினாத்தாள்

இவ்வினாப்பத்திரம் 03 மணித்தியாலங்களைக் கொண்ட கட்டுரை வடிவிலான வினாப்பத்திரமாகும் .அதில் 08 வினாக்களில் 05 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

விடயப்பரப்பு

நிதிப்பிரமாணம் 01 தொடக்கம் 157 வரையான அத்தியாயங்கள் தொடர்பான அறிவு பரீட்சிக்கப்படும்.

08. பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல்.

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்துபார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவிசெய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

09. தயவுசெய்து இச்சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களினை தங்களின் நிறுவனத்தில் கடமையாற்றும் சகல உத்தியோகத்தர்களிற்கும் தெரியப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இந்ததகவல்களை www.health.gov.lk எனும் இணையத் தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

கவனிக்கவும் :- சிங்களம், தமிழ், ஆங்கில மொழியிலான சுற்றுநிருபங்களுக்கிடையே ஏதாவது ஒவ்வாமை காணப்படுமாயின் சிங்கள மொழிமூல சுற்றுநிருபமே வலுவுடையதாகும்.

Gamage

ஷாமிக எச். கமகதே
பிரதிப் பணிப்பாளர் நாயகம் நிர்வாகம் (11)
செயலாளருக்காக
சுகாதார் அமைச்சு.

Chamika H. Gamage
Deputy Director General (Administration) II
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.

பிரதிகள்

- பிரதிப் பணிப்பாளர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி - அவசிய நடவடிக்கையின் பொருட்டு
- பணிப்பாளர் தாதியர் நிர்வாகம் - 01 - அவசிய நடவடிக்கையின் பொருட்டு
- பணிப்பாளர் தாதியர் நிர்வாகம் - 02 - அவசிய நடவடிக்கையின் பொருட்டு
- பணிப்பாளர் தாதியர் கல்வி மற்றும் பயிற்சி - அவசிய நடவடிக்கையின் பொருட்டு
- பணிப்பாளர் தாதியர் வைத்திய சேவை - அவசிய நடவடிக்கையின் பொருட்டு
- பணிப்பாளர் நிர்வாகம் - V - அவசிய நடவடிக்கையின் பொருட்டு
- படைத்தளபதி - அவசிய நடவடிக்கையின் பொருட்டு
- ஆயுர்வேத ஆணையாளர் - அவசிய நடவடிக்கையின் பொருட்டு
- அனைத்து தாதியர் பயிற்சிக் கல்லூரி அதிபர்களும் - பரீட்சையின் பொருட்டு பரீட்சை மண்டபங்களை ஒதுக்கி வைப்பதற்காக பொருட்டு.

EXI

| அலுவலக பாவனையின் பொருட்டு |
| --- |
| |

மாதிரி விண்ணப்பப்படிவம்

## தாதி உத்தியோகத்தர் தரம் III ற்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை – 2021

01. (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில் எழுதவும்)
.............................................................................................................

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (ஆங்கில கப்பிட்டல் எழுத்தில்)

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் ( தமிழில்) .............................................................
.............................................................................................................

(iv) முதலெழுத்துக்களுடன் பெயர்( ஆங்கில கப்பிட்டல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) தாதி உத்தியோகத்தர் தரம் III ற்கு நியமிக்கப்பட்ட திகதி : ..............................

(ii) தற்போது பெறும் வருடாந்த சம்பளம் : ...........................................................

(iii) கையடக்கத் தொலைபேசி இல : ☐☐☐☐☐☐☐☐☐☐

(iv) தேசிய அடையாள அட்டை இல : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

02. தாங்கள் இம்முறை தோற்றுவதன் பொருட்டு எதிர்பார்த்துள்ள விடயத்தின் எதிரேயுள்ள கூண்டினுள் (√ ) அடையாளத்தினை இடுக. தோற்ற வில்லையாயின் (X) அடையாளமிடுக.

தாபன விதிக்கோவை ☐ நிதிப்பிரமாண ☐

03. (அ) தற்போது சேவைபுரியும் நிலையம் ( சிங்களத்தில்) ............................................

தற்போது சேவைபுரியும் நிலையம் (ஆங்கிலத்தில்) ............................................

(ஆ) அதற்குரிய மாவட்டம் ..............................................................................

(இ) இந்தநிறுவனம் நிர்வகிக்கப்படுவது - மத்தியஅரசினால் ☐

மாகாணசபையினால ☐

(ஈ) மாகாண சபையாயின் அதற்குரிய மாகாணம் .........................................................

(இப் பரீட்சை நிலையத்திற்கு போதிய விண்ணப்பதாரர்கள் இல்லாதவிடத்து அண்மையிலுள்ள பரீட்சை நிலையத்திற்கு இணைத்துக் கொள்ளப்படுவர்)

(உ) பரீட்சை அனுமதி அட்டையினை அனுப்புவதன் பொருட்டு பிழையின்றி தெளிவாக தங்களுடைய முகவரி எழுதப்பட்ட 9" X 4" அளவுடைய, ரூபா 45.00 பெறுமதியுடைய முத்திரையொட்டப்பட்ட கடித உறை இரண்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா? ......................................

(ஊ) (i) தபால் முகவரி (தமிழில்) .............................................................................
.............................................................................................................

(ii) தபால் முகவரி (ஆங்கில கப்பிட்டல் எழுத்துக்களில்) ..............................................
.............................................................................................................

04. பரீட்சைக்குத் தோற்றும் மொழி ( சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) ...............................................

EXI

05. (அ) இதற்கு முன்னர் இப்பரீட்சைக்கு தோற்றியுள்ளீர்களா? ........................................................

(ஆ) தாங்கள் விண்ணப்பிப்பது முதற் தடவையில்லையாயின் முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா? ...............

| முத்திரைக் கூண்டு |
|---|

06. **விண்ணப்பதாரியின் சான்றிதழ்**

எனது அறிவிற்கும், விசுவாசத்தின் அடிப்படையிலும்

I இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவைகளெனவும், இப் பரீட்சைக்கு நான் தோற்றுவது முதன்முறையானபடியால் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை எனவும் / முதன் முறை அல்லாதபடியால் ரூபா ........................ பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்தில் என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் மதிப்பு நீக்கம் புரியப்படுவதற்கு முன்பு வலுவிலுள்ள பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

II சுகாதாரத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு உடந்தையாக நடப்பேன் எனவும், இப்பரீட்சை தொடர்பாக நியதிச் சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எதுவிதத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுவேன் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ...................................

......................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

07. **விஷேட தர தாதி உத்தியோகத்தரின் சிபாரிசு**

திரு ∴ திருமதி ∴ செல்வி .......................... தரம் ஐஐஐ தாதி உத்தியோகத்தராக எனது பிரிவில் கடமைபுரிகின்றாரெனவும் அவர் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

..........................................

திகதி .................................... விஷேட தர தாதி உத்தியோகத்தரின் கையொப்பம்

08. **சுயவிபரக் கோவையினை கையாளும் உத்தியோகத்தரின் சிபாரிசு**

இவ்விண்ணப்பம் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் இவ் விண்ணப்பம் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும். விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சுயவிபரக் கோவைக்கு அமைய சரியானவை என்றும் இதன் ஒரு பிரதி சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ...................................

.................................................

பெயரும், கையொப்பமும்.

09. **நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திரு/திருமதி/செல்வி/செல்வன்* ............................................. என்பவர்................................ உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் பணிபுரிகின்றார். ஏன்றும் அவ் உத்தியோகத்தர் இப் பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறையாக இல்லாத* படியால் ரூபா .......... பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும் /முத்திரைகள் ஒட்ட அவசியமில்லை* எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும், எனது முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ......................................

.................................................

நிறுவனத் தலைவரின் கையொப்பம்

10. **பன்முகப்படுத்தப்பட்ட / விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர் / திருமதி / செல்வி ............................................... என்பவர் III ஆம் தரத்தினைச் சேர்ந்த தாதி உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கபட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரருக்கு தகுதி உள்ளதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன

திகதி ........................................

................................................

பன்முகப்படுத்தப்பட்ட பகுதி /
விசேட இயக்கத் தலைவரின் கையொப்பம்